**வெளிநாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட குழந்தை பாதுகாப்பு நடவடிக்கைகளில் இந்திய குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் மனிதாபிமான நெருக்கடி**

கோரிக்கை

இந்த மனுவானது வெளிநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பறிமுதல் செய்யப்பட்ட இந்திய குழந்தைகளை அந்த நாட்டின் அரசு இல்லங்கள் அல்லது வளர்ப்பு விடுதிகளில் விடுவதற்கு பதிலாக அந்த குழந்தைகளை அவர்களின் இந்திய உறவினர்களிடம் அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் ஒரு முறையான மற்றும் வெளிப்படையான செயல் திட்டம் ஒன்றை உருவாக்க பரிந்துரைக்க கோரி தேசிய மனித உரிமை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

பின்னணி: மனிதாபிமான நெருக்கடி

வெளிநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பறிமுதல் செய்யப்படுகிற இந்திய குழந்தைகள் அந்த நாட்டின் அரசு இல்லங்கள் அல்லது வளர்ப்பு விடுதிகளில் தங்களது உடன்பிறப்புகள் இன்றி வளர்வதலோ அல்லது தங்களது கலாச்சாரம் சம்பந்தப்படாத குடும்பங்களில் தத்தெடுக்கப்படுவதாலோ, குடும்ப வாழ்கை இல்லா எதிர்காலத்தை எதிர்நோக்குகிறார்கள்.

இந்திய பிரஜைகள் வெளிநாட்டில் தற்காலிகமாகத் தங்கியிருந்தால்கூட அந்த நாட்டின் பறிமுதல் செய்யப்பட்ட குழந்தைகள் பாதுகாப்பு சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் என்று நார்வேயை சார்ந்த பட்டாச்சார்யா குடும்ப வழக்கு மற்றும் அமெரிக்காவை சார்ந்த சாஹா குடும்ப வழக்கிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. குழந்தைகளை பறிமுதல் செய்தபிறகு பெற்றோர்களுக்கு மிகக்குறைந்த நேரமே பார்வைக்காக கொடுக்கப்படுகிறது: இது ஒரு வருடத்திற்கு இரண்டு மணி நேரமாகக்கூட இருக்கலாம்.

பெற்றோர்களிடம் இருந்து அவர்தம் குழந்தைகளை எந்த விதமான உரிய காரணமின்றி நிரந்தர பறிமுதல் செய்தல் என்ற அதிகபட்ச நடவடிக்கை மற்றும்

அது சம்பந்தமாக பெற்றோர் மற்றும் குழந்தைகளின் மனித உரிமை மீறல் போன்ற அதிர்ச்சியூட்டும் தகவல்கள், நார்வேயின் பாதுகப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான பட்டாச்சார்யா வழக்கில் கூறப்பட்டுள்ளது.

மனுதாரர் சேகரித்த தகவல்படி இந்த நிலைமை நார்வே குழந்தை பாதுகாப்பு அமைப்பு பற்றிய பட்டாச்சார்யா வழக்கிற்கு மட்டுமே பொருந்தும் என்று கூறமுடியாது. வடக்கு ஐரோப்பா, யுனைடெட் கிங்டம் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளில் பறிமுதல் செய்யப்பட்ட குழந்தை பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது பெற்றோர்களும், குழந்தைகளும் முக்கியமான அமைப்பு முறையான மனித உரிமை மீறல்களுக்கு ஆளாவதாகத் தெரியவருகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட குழந்தைகள் நடவடிக்கைகளின்போது, இது போன்ற கடுமையான அரசாங்க தலையீடுகள் இருந்தாலும் வளர்ந்த நாடுகளில் அரசாங்க அதிகார துஷ்பிரயோகம் தணிக்கை இன்றி இயங்குகிறது. பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளை பறிமுதல் செய்ய குறைந்த குறுமட்ட மதிப்பு; பெற்றோர்களுக்கு செவ்விய விசாரணை தராதிருத்தல்; குழந்தை பேணிப்பு மதிபீட்டலில் பண்பாட்டு பாரபட்சம்; சட்டம் சார்ந்த தொழில்நுட்ப அறிவு சாராத தீர்பாயங்களின் பறிமுதல் ஆணைகள்; அரசாங்க பாதுகாப்பு தர குழந்தைகளை பாதுகாப்பு நிறுவனகளுக்கு அனுப்புதல், தத்து இல்லங்களில் சேர்த்தல், மற்றும் கட்டாய தத்து கொடுத்தலில் ஏற்படும் பண ஆதாயம் சம்பத்தப்பட்ட முரண்பட்ட ஆர்வம்; நீதி மன்றங்களையும் பாதுகாப்பு ஊழியர்களையும் பொது ஆய்வுநோக்கு மற்றும் பொருப்புடமையில் இருந்து இந்த குழந்தை பாதுகாப்பு நடப்புமுறை காலங்களில் இருந்து பாதுகாக்க அந்தரங்க சட்டங்கள்; இது போன்ற வழக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துரைக்கப்படுகிறது.

<u>தலையீடு சட்ட அடிப்படை: திரும்பவரும் உரிமை</u>

சர்வதேச குடியுரிமை மற்றும் அரசியல் உரிமை உடன்படிக்கைகளின்படியும், சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமை உடன்படிக்கைகளின்படியும், வெளிநாட்டிலுள்ள இந்திய குழந்தைகள் தாய்நாடு திரும்பும் உரிமையும், விரிவாக்கப்பட்ட குடும்பத்துடன் வாழும் உரிமையும்,

அவர்களின் சொந்த பண்பாட்டின்படி வளர்க்கப்படும் உரிமையும், பெற்றுள்ளனர். இந்த சர்வதேச உடன்படிக்கையின்படி அனைத்து நாடுகளும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமுதாயத்தின் அடிப்படை குழுவாக செயல்பட அதிகபட்ச உதவி புரியவும், மற்றும் அனைத்து மக்களும் கலாச்சார உரிமை அனுபவித்திட வசதி செய்துதர கூட்டு நடவக்கையை அனைத்து நாடுகளும் எடுக்கவும் பணிக்கப்பட்டுள்ளது. இந்த சர்வதேச ஒப்பந்தங்களின்படி, இந்திய குழந்தைகளின் தாய்நாடு திரும்பும் உரிமை, குடும்ப வாழ்வுரிமை மற்றும் பண்பாடு பேணும் உரிமை ஆகியவற்றை பாதுகாக்கும் விதமாக, இந்திய குழந்தைகளை நாடு திரும்பக் கொணர்தல் சம்பந்தமாக இந்திய அரசு மற்ற நாடுகளின் ஒத்துழைப்புடன் ஒரு செயல் திட்டத்தை உருவாக்கிட வேண்டும்.

எந்தவித தவறும் செய்யாத, ஆனால் வெளிநாடுகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளின்படி பறிமுதல் செய்யப்பட்ட குழந்தைகளுக்கு, மேற்படி உரிமைகளை அமையும் விதமாக நடைமுறைப்படுத்திட உரிமை உண்டு. தாய்நாடு திரும்பிட அவர்களுக்கு அரசாங்கம் வசதி செய்து தருதலே, குழந்தைகள் தங்களது பண்பாட்டை பேணவும், குடும்ப உறவை காத்துக்கொள்ளவும் அவர்களுக்கு முதன்மையான வழியாக அமையும்.

<u>தலையிடுதல் சம்பந்தமாக அமைப்பு முறை செயல் திட்டத்தின் அவசியம்</u>

பட்டாச்சார்யா குடும்ப வழக்கில், பறிமுதல் செய்யப்பட்ட குழந்தைகளை இந்தியாவில் உள்ள அவர்களது குடும்பத்தினரிடம் சேர்ப்பிக்க வெளிநாட்டு நிர்வாகத்திடம் பேச்சு வார்த்தை நடத்துதல் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தின் மனிதாபிமான தலையிடுதலை நாம் பாராட்டுகிறோம்.

இருப்பினும், இந்த வழக்குகளில் முறையான மற்றும் வெளிப்படையான செயல் திட்டம் இல்லாதது, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள சமஉரிமை கோட்பாட்டிற்கு -- அந்த கோட்பாடானது அனைத்து அரசு நடவடிக்கைகளும் செயல் அதிகாரத்தின் கீழ் வரும் செயல் நடவக்கைகளும் ஒருதலையாகவும், எதிர்மறையாகவும் இருக்ககூடாதென்று கூறும் நிலையில் -- ஊறு செய்வதாக உள்ளது. வெளிநாடுகளில் குழந்தைகள் காப்பு நடவடிக்கைகளில்

பறிமுதல் செய்யப்பட்ட தங்களது குழந்தைகளின் நிலைபற்றி, சமூக மற்றும் பொருளாதார பின்தங்கிய பின்னணியுடன் கூடிய குடும்பங்கள், அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்க இயலவில்லை. ஆகவே, ஒரு குறிப்பிட்ட வழக்கில் தலையீடென்பது முக்கியமானதல்ல, ஆனால் இந்த வழக்குகளை நடத்திட அரசாங்கம் ஒரு முறைப்படுத்தப்பட்ட செயல் திட்டத்தை உருவாக்கிடுதலே முக்கியமானது.

*****